327/நா-ஞா/புலத்தி-ஞான கற்பம்2
/92 ]2/
பக்கம்47 புலத்தியர் ஞானகற்பம் 222

உ

பரமபதி துணை.

பதினெண் சித்தர்களிலொருவராகிய

புலஸ்தியர் விளக்கிய

# ஞான கற்பம்



சென்னை - இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1936. [அணா 8.

ரிஜிஸ்டர் காபிரைட்.

S. 307

உ

பரமபதி துணை.

பதினெண் சித்தர்களிலொருவராகிய

புலஸ்தியர் விளக்கிய

# ஞானகற்பம்-222

இஃது

சிங்கார முதலியார் அவர்களால்

பலஏட்டுபிரதிகளைக்கொண்டு

எழுதப்பட்டு.

---

சென்னை - இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1936 [அணா 8.

ரிஜிஸ்டர் காபிரைட்.

உ

கடவுள் துணை

புலஸ்தியர் விளக்கிய

# ஞானகற்பம் - உஉஉ.

கலி விருத்தம்.

சீருலாவியதென் பொதிகையில்வாழ்
மேருசூழகத்தீச ரருளினல்
பேருறும் புலத்தீசர்விளங்கிய
கார்மதம்பொழியானைப் பணிகுவாம். 1

சீரணிந்த செழுஞ்சடைமேவிய
நாரணிப்புலவனும்பிகை பொற்பதம்
வாரணிந்தமதிமாமலர் சூடியக்
காரணிக்கமலந்தனைப் போற்றுவாம். 2

அண்டபிண்டமளாவிய ஐந்துரு
நின்றிலங்கும் நிராதரத்துட்பொருள்
குண்டலித்தன்குகனைப் பணிந்துயான்
விண்டமாமதி விந்துவைப்போற்றுவாம். 3

விந்துநாதம் விளங்கியகந்தனி
லைந்துருப்படி யாதலாலைம்பொறி
செந்துவாழ் சிவயோகிகளுற்பதம்
தந்திமாமுகன் ருள்பணிந்தோதுவாம். 4

ஞானகற்ப நவின்றிருநூறுமே
வானதாவிய மாமுனிதன்னருட்
பாணமுண்ணப் பரகதிதந்தரு
ளானைமுகனை யெந்நாளுமறவனே. 5

வாலைகுண்டலி வல்லபையாதலால்
மூலவாசி முனைச்சுழிமுன்னமே
ஆலமுண்டவரனருள் யான்துதி
காலைமாலைக்கதிர்மதி காப்பதாம். 6

கதிர்சூழும்மதி காரமுஞ்சாரமாய்
அதிவிதநாந்தவடி நடுமூலமும்
மதிவிந்துகோசம் வரும்வழிதாரையில்
நதியிருந்தபூவும் நாடியனுமமே. 7

அப்புமால்திருமைவகை நீரதாம்
செப்பவொண்ணுத் திருமாலுக்கடிமை
வொப்பனையப்புவால் கற்பமோராண்டினி
யிப்படியாகிலுஞ் செய்கற்பனையாவதே. 8

கற்பனைச்சொற்றவருக் கருதிடி
லற்பமென்றேத் தகத்திடுவாமலுங்
தற்பரையாகிய சாரமமுரியா
லப்பனைக்கண்டருள் பெற்றுலாவுமே. 9

அருள்பெற்றிடும் விந்தமறியகாரமாய்ப்
பொருள்நிலவுப்பைப் புசிக்கப்புசிக்கவும்
யிருள்பத்திருந்த யெண்சானுடல்தேகமும்
மருள்விட்டகன்று மதிநிலவாகுமே. 10

மதிநிலவாகிய மாமதிச்சாரமே
நிதிமறைனூல்படிநேர் பிசகாமலும்
துதிசெய்தினஞ் சரமாறிதொடுத்திடும்
விதியின்படிவந்து விட்டகுறைபிதே. 11

முதல் திங்கள்.

விட்டவிதிப்படி விந்ததிசாரமே
தொட்டிடும்விந்து தொடுத்தொருதிங்களில்
அட்டுப்பதுகுண மாறிடமாறிட
யெட்டியபானன் யெகிறியுதைப்பதே. 12

எட்டியபானன் யெகிரியுதைப்பதால்
மூட்டிமூலாக்கினை மும்மலச்சூடுதான்
தட்டுமுட்டாகிச் சமானனுஞ்சீறிடில்
அட்டியில்லாமல் அதியுஷ்ணமாகுமே. 13

அல்லல்வெம்பலடிக்கடி பேதியால்
தொல்லைவாராத் தொடுத்திடுஞ்சாரமுங்
கொல்லும்வாயுவு கொடூரமதுவிட
நல்லதோரெருவேற் கொம்புநல்கிடே. 14

### இரண்டாந் திங்கள்.

நல்குஞ்சாரம் நமனைக்கெடுத்திடு
மெல்கும்நோய் வினையேகிடுமாதலால்
ஒல்கும்வோரிரு திங்களிரண்டினில்
வெல்கும்பானன் விகற்பம்நினைப்பனே. 15

நினைப்பதென்ன மூலச்சுழிநாபியில்
வினைப்பயன் மிகவேதனையாகிடும்
இணைப்பதிந்து துயில்வதமுரியால்
யனைப்பட்டதுந்தொந்த மடிக்கடிமாறுமே. 16

மாறமாற மதுபானச்சாரையி
லூறும்வாத மடக்கியஞ்சூட்டிடும்
வேறுவாதவினைப் பித்தமோடியே
தேருஞ்சாரைநீர் சித்தியதாகுமே. 17

### மூன்றாந் திங்கள்.

சித்தியாதல்திரி மூன்றுதிங்களில்
எத்திவாயுவு யெகிறியுதைக்குமா
யுத்திசத்தி யுடலாதிநோயதும்
வற்றிதேகம் வயிறுபொருவலே. 18

பொரும்பலாதல்புகை விழிசூடதாம்
அரும்பமேகமும் யாக்கையரிப்பதாய்
விரும்புவாரி விடாமலடிக்கடி
திரும்பத்திப்பிலி திரிமூன்றுங்கூட்டிடே. 19

கூட்டும்வாரி குடோரத்தின்வாய்மையா
லூட்டும்பித்தமு முஷ்ணமுமேகிடும்
வாட்டுங்கைகால் வலிக்குஞ்சலிக்குமாய்ச்
சூட்டினல்வயர் தூர்ப்பலனகுமே. 20

### ஆலகாலவிடம்.

பாலனவது பானமேயுண்டிடில்
காலனோடிக் கடல்புக்கிடும்மதால்
வாலைசஞ்சீவி வாருதியாற்சடம்
ஆலகால மமுரியதாகுமே. 21

நாலாந் திங்கள்.

தாவினாலுஞ் சதுர்திங்கள்மாமதி
ஆவிசோர வமுரியடிக்கடி
மேவியுண்ண வினையதுமோடிடும்
பாவிநோய்கள் பகைத்திடும்பாருமே. 22

பகைக்கும்பானன் சமானன்றனஞ்செயன்
வகைக்குமூவரு மல்லுதியங்களால்
திகைக்குமெண்சாண் திசையெட்டுமோடியே
நகைக்கும்வாதபித்த சேத்துமநாடியே. 23

சேத்துமநாடி செழுங்கனல்யீறியே
ஆத்துமவெல்லா மருந்தணலாகிடும்
மாத்திதுக்கில்லை மருந்தேயமுரிதான்
பாத்தெழுபத்தும் பகையதுமாறுமே. 24

யெழுபத்திராயிரம் நரம்போடினல்
பழுவெலும்பிரு பக்கமுளைத்திடும்
அழுதல்துக்கம் மசைதலுளைந்திடும்
தழுதல்தேகம் தடித்துக்கடுக்குமே. 25

கடுக்குமேவயறு கைகாலுளைந்திடும்
வெடுக்கதால்சட மெய்வாய்வெளுத்திடும்
ஒடுக்கம்நாடி யுடலெங்குமூதலாய்
தொடுக்கும்புண்கட் டியரம்வைப்பார்களே. 26

திரமேது தொடுத்திடுஞ்சாரையால்
வயிரமாகு மதுகடுக்காய்பொடி
சயிலவாரிவெண் சாரையேமேல்மருந்
துயிர்பெலக்கு முடன்கொள்வோர்களே. 27

கொண்டுமாறக் குணுகுணங்கூறிடில்
கண்டநோய்கள் கடல்புக்கியேகுமாஞ்
சண்டனேது சடத்தைவிட்டேபிரிந்
தண்டரண்டமு மக்கினிபிரவேசமே. 28

அஞ்சாந் திங்கள்.

அக்கினியாலழியாது பிராணலயம்
விக்கிரமதஞ்சு விளங்கியதிங்களில்

உக்கிரதாது உருகிநீராகிடும்
சக்ரவாளெனும் சாரைவெண்சாரையே. 29

சாரைநீரைச் சரமாறியேத்திடில்
தாரைகோசம் தடித்துப்புண்ணாகிடும்
மாரசாரனை மாமதிகொண்டிடில்
யேரத்தொந்த மெரிபந்தங்காணுமே. 30

யெரியுந்தேக மெண்சாணுடலாதீதம்
விரியுங்கண்ட மிகவும்புண்ணாகிடும்
துரியவேகஞ்சுரம் நளிர்கண்டிடும்
நெரியுமேதனு நீர்கடுப்பாகுமே. 31

நீர்கடுக்கும் நினைப்புவேறாகிடும்
துர்ப்பலபலமாகிய துக்கமதால்மனம்
வேர்ப்பபலபிணி வியானனுதானனுங்
கூர்மநாகன் குணகுணங்காண்பதே. 32

காண்பதேது வியானன்கொடூரமே
சாண்வயர்விம்மி சடித்துபேதியாம்
வீண்பதரில் வெடித்துவுடம்பெலாம்
ஊணறுசுவையுதானனொழிக்குமே. 33

ஒழிக்குங்கூர்ம னுடம்பூதிநித்திரை
விழிக்கும்விழி மெய்மறந்தாக்கையும்
கழிக்குமனகன் கனலினால்மெய்களை
முழிக்குந் தேவதத்தன்முன்னமே 34

தேவதத்தன் தியக்குமயக்கமாய்
யாவலாகிரியதீத முண்டாக்கிடும்
பாவபுண்ணியம் பற்றுமல்நடப்பதாம்
நாவதிசார னடிப்புண்டாகுமே. 35

உண்டவன்ன முடன்செரியாமலும்
கண்டதாரை கனத்துமேயூதிடும்
விண்டபானன் விளங்கியநீரினில்
கண்டுதிப்பிலிகையான் பொடியதே. 36

கண்டுதிப்பிலிகால் களஞ்சேபோடி
கொண்டிடுஞ்சமன் கோழையகத்திடும்

மண்டலமீது வாய்க்குமதுக்குப்பின்
விண்டபானன் வியாதிவிபரமே. 37

விபரமஞ்சு மேவிடுமேல்மருந்
தவறிடாமலுந் தாநஞ்சுபட்சமும்
புவியிலோர்க்குப் புகலொருதிங்களில்
நவிக்குமண்டலம் நற்குறியாவதே. 38

நற்குணமெனும் ரத்தினதிகற்பமே
சற்குணமெனுஞ் சற்புத்திரனுகவுந்
துர்க்குணமயல் திரோதகையாசைவிட்
டேற்குணப்புத்தியோனி யாசைவிட்டிடே. 39

யோனியாசை யொழியாதபாவிகள்
மானிலத்தொருபயிர் மறந்துபிரிந்திடும்
தானணிமயல்தான் விட்டகற்றியே
ஞானினிசெய்யுஞ் ஞானகற்பமிதே. 40

ஞானியாவதுநற் புத்திமாந்தரில்
யோனிக்கேணி யுற்பத்தியாவராய்
வானுதானும் மடைந்தையராசையில்
தானுழலத் தவரிடுங்கர்ப்பமே. 41

தானுழன்று தனியேதவிப்பர்கள்
பானமுண்டு பழக்கந்தவறிடில்
சோனையாய்வடிந் துர்ப்பலமாகிடு
மானேகேளுமானுக்கள் மாள்வோர்களே. 42

தேகசித்தி.

மனிதராகி வடிவெடுத்தங்கனே
புனிதனைச்சிவ போதனைப்பூண்டுபின்
தனியஞானத் தவம்பெற்றுலகில்வாழ்
யினியசாரை யியல்பினைக்கண்டோர்களே. 43

சாரைநாகந் தனையுருவாகிடில்
பேரையானருட் பேருலகந்தனில்
நீரையுண்டு நிரந்தரசொரூபமாய்
வேரையுண்ட விவேகியிவர்களே. 44

வெண்சாரை.

வேகமாகிய வெண்சாரைப்பாம்பிது
போகத்தாசைப் பொருந்தாதிதற்குமுன்
ஞகமத்தோ ரமரியாலாத்துமங்
திரேகசித்தியால் சித்தர்களாவரே. 45

ஆருந்திங்கள்.

தேகசித்தியாங் திங்களுமாறினில்
நாகப்பாம்பு நடுவெனுஞ்சாரையைத்
தோகைப்பாலெனுஞ் சோமப்பால்வாரிதான்
காமப்பாலுண்ட கருத்தையழிக்குமே. 46

கருவியால்பானங் காலாகாலங்களும்
குருவாயனுதினங் கொண்டுடன்சாரணை
வருவதோர்பானம் மாறச்சரமாறி
சுருவாயனலினல் சுரம்வந்தணுகுமே. 47

அணுகுமூலத்தி லனுசரிப்பதுவெனும்
குணமுந்திரிகரன் கூடப்பொரிந்திடில்
மணம்பொரிந்திமல மதிகமதாகும்
நிணமும்வைத்துநீர் நெஞ்சுபுண்ணாகுமே. 48

வேறு-கவி.

நெஞ்சுமுணர்ந்துநெறிதவறி நீருய்வெதுப்பும்வேர்வையுடன்
பஞ்சதுபோல்கைகாலும் பதறிநடப்பதுங்குறையும்
வெஞ்சொல்தவறிமதிமயக்கும் விக்கல்கக்கல்விதவிதமாய்
நஞ்சுணர்வோர்பரிட்சையெனும் நளிர்வாய்குளிர்சுரமதுகாணே. 49

காணுமடிக்கடிபலபேதி கடிதாய்சுரந்துவயறாதும்
வீணேமுன்னாள்வினைப்பயனும் விதியாபெழும்புமதியதனல்
ஆணுப்பிறப்போரிக்குறிகள் யமுரியதனைலதீதமுறுங்
தாணுய்தொடுக்கச்சாமாறி சுகமாய்கொள்வீர்சாரணையே. 50

சுகமாய்கொள்வீர்பானமதில் துரிதாய்மிளகுதிப்பிலியும்
யகமாய்வேர்க்கொம்பதுமூன்றும் வனலில்வெதுப்பிச்சரிசமனுய்
தகுமேபொடியாய்ச்சூரணித்து சாரநீரிலுடன்கொள்ள
யுகையாய்பட்சமுடனறுத்து ஓகோபிணிகளோடிடுமே. 51

பட்சமுணரப்பலநோய்கள் பறந்தேயுடல்விட்டகன்றிடுமாம்
நச்சத்தரவின்பாலுணர நமனுகிலுமேவினைநாடாது
நிச்சயமின்னூல்ரத்தினுதி நிகழ்த்துமிருனூறுய்ந்திடிலோ
யச்சமதுவாய்வாழ்வுபெறும் ஆறுதிங்களதிசயமே. 52

ஏழாந்திங்கள் வேறு.

திங்களேழில்சாரணைதான் திருத்தமாமதிசரமாறி
மங்கயர்மீதில்நினைப்பாகா மதிப்பாலுணர்ந்துமகிழ்வீராய்
அங்கமதனில்மூலாக்கினி யனல்கொண்டெழுப்பியாகர்சம்
பங்கப்படுத்துந்தசவாயுவும் படுக்கைமுடக்கல்பலவினையே. 53

வினைநொய்ப்பிணிகள்மிகமீறி வெடுக்கென்றனல்கொண்டருப்பாகி
சுனைநீரரிவிமதிபெருகித் தொடுக்கச்சரமாறிக்கனைக்குஞ்
சயமுங்காசமூறும்கபமுங் கோழைக்கருதிடுமாய்
தனக்குத்தெரிவசர்வாங்கந் தணலாய்சுரமுந்தலைப்படுமே. 54

தலைநோய்கபாலஞ்சடாசடியாய்ச் சரமாய்த்தொடுக்குமிடிமுழக்கம்
வலிவாய்மயக்கும்வயர்நோகும் வாய்தாளிரண்டுந்தான்பிடிக்கும்
கலையாமனதையோருறுதி கைகால்கடுக்குங்கண்கூசும்
நிலையாய்க்குலைநோயடிக்கடிதான் நினைவாயிருந்துநிகழ்த்திடீரே. 55

நினைவாயமுரிதினந்தோறும் நிலப்பனையதுவின்கிழங்குலர்த்தி
வினவாய்சுக்குமிளகுடனே யிதுமூன்றுவகைசரிசமனுய்
யினமாயிடித்துச்சூரணித்து யிச்சூரணந்தனிலேகழஞ்சிடையாய்
நினவாயமுரிதனிற்கொள்ள கடலேபுக்குமதுபிணியே. 56

பிணியாவதுவேதீவினைதான் பிரியாதுடலிற்பிறவியதாம்
சனியாவதுவுஞ்சடந்தனிலே தனக்குத்தானுய்சஞ்சலங்கொண்
டணியாதகமாயவதரிக்கும் அமுரியினுலலைகடல்புக்கும்
பணியாவதுமோகாரமேகம் பறக்குமதுபோல்பாரீரே. 57

எட்டாந் திங்கள்.

பாரீரஷ்டதிங்களிலே படுக்குமுடக்குமதாய்
வாரீர்வாய்வுவாதபித்தம் வைராக்கியங்கொண்டதுமூலம்
தேரீர்திடுக்கிட்டதுவிழிகள் திசையுங்கலங்கியக்கமுறும்
கூரீர்மந்தநித்திரையால் குறிப்பாய்மயக்கங்குணமிதுவே. 58

இதுவேயினிதானறிவாகும் இளப்பாமசதியிஸமசக்கை
பதியேழ்பதிராயிரநரம்பும் பசுமைநிறங்கொண்டதீதமதாம்
மெதுவாய்நடக்குமிருப்புளிக்கும் வெறிகொண்டவர்போல்விழலாகும்
அதுவாய்குரல்மெதுவாகிவிடும் யனல்கொண்டெரியுமறிவீரே. 59

அதிமதுரமிரகரத்தையுடன் முறிகற்பம்.

அனல்கொண்டதுதானகலவுமே யதிமதுரத்தோடுவோர்க்கொம்பும்
கனலோடிடவுமிளகரத்தை கருதியிடுஞ்சரிசமன்கூட்டி
புனல்சூழ்ந்திடவேவறுத்திடித்துப் பொடியாய்ச்சூரணம்புகல்வீரு
ஸினமாயமுரியின்னீரில் எடுத்துக்கால்கழஞ்சிடுவீரே. 60

இடுவாயமுரிதனிலுண்ண விருவினையாலெய்திடுநோய்கள்
நடவனையாலன்னசித்தோடும் நமனேகருகிநடுங்கிடுவான்
படும்பாடதிசயவிதமறியப் பகர்வாய்பாணஞ்சரமாறி
விடுவாய்மதிசரபாணமதால் விதியைவெல்லுமிதாஸ்திரமே. 61

அமிர்தசஞ்சீவியாஸ்திரமேனல்.

வெல்லுமமுரிபஞ்சாக்ஷரமே மிகவுமேன்மருந்தநிவூட்டி
கொல்லுந்தானுமதைக்கொண்டால் குணமாம்தோஷமுனக்கேது
அல்லும்பகலும்விடாமலுமே யமுதசஞ்சீவியஸ்திரத்தால்
மல்லுத்தியமாய்நடுவணையை மாறிமாறிடஜெயமாமே: 62

அமுரியின் பெருமை.

சயமாயமுரிதெளிந்திடலாம் திரமாய்ஜடலஞ்சித்தியதாம்
க்ஷயமுங்காசவாதபித்தம் தானேபறக்குஞ்சிலேத்பனமும்
மயகாமியமதமாச்சரியம் மதிரீரதுசஞ்சீவியுணர்
பயமுங்கிலேசம்விட்டேகிடும் பாரீர்மகத்துகள்பண்போரே. 63

அரியார் தெளிந்தவர்போல பேசுவதேனல்.

பாராமலுமேபாடுபடா பலவாய்மொழிகள்படித்துலகில்
தேராமலுமேசில நூல்கள் தெளிந்தாரதுபோல்தெளிந்தவர்போல்
தோராமலுமேவாய்ஞானம் தொடுத்தேதொடுப்பார்சரமாறி
கூராதது நூல்குவலயத்தில் குருநூல்போலக்கூறுதே. 74

குருநூ லிருநூற்றின் மகிமையும்

தீக்ஷைகேங்கைமதியால் அரிவதேனல்.

குருநூலிருநூறுகுவலயத்தில் கொடுக்கார்பரிகோடிதனமீய்ந்தும் [ம்
அருள்பெற்றமிசையதுவிருந்தால் யமைப்பாலமைக்குமருட்பொருளு

இருளும்விலகுமிராப்பகலா யிறப்பும்பிறப்புமிதுபோச்சு
மருவும்தீக்ஷைகெங்கையதாம் மதியாலறிந்துமகிழ்வீரே. 65

மதிசந்திர புஷ்க்கரணி மறைத்ததேனல்.

மதிசந்திரபுஷ்கரணியதாம் மரைத்தார்பெரியோர்மகத்துகள்தான்
விதியாலதுமதியறியாட்டால் வேறொன்றறியார்புவிமீதில்
துதியால்ஞானச்சுகாதிதமே சுயம்பிரகாசச்சுடர்மணியே
நிதியாய்விளங்கும்நதியறிந்து நீந்திக்கரையேறமாட்டாரே. 66

வி ஷ ம்.

அறியாரரவமதின்விடமே யரனுண்டமுதமறியாமல்
பரியாசகமாயுலகோர்கள் படிப்பார்வெகுநூல்பரிபாஷை
வெறியாய்ப்புராணம்வெகுவாஞ்சை விதியாகவிவரடியலேவதுவாய்
குறியாரறிவரறியாமல் குருநூலறிந்தால்குருவாமே. 67

ஒன்பதாந்திங்கள்.

பிறுணவாய் வெழுந்தோங்கு நிலமை.

குருலாயமைத்திடுஞானகற்பம் கூறூர்குவலயத்தோர்களுக்கு
ஒருவாயொன்பதுதிங்களினில் உளேக்கும்வயிர்நோயுடல்பெருத்து
கருவாய்மலர்ந்துகனத்துடலும் கமலமலர்பூதியல்பாகி
பெருவாய்மலர்ந்துயிடிபோலும் பிறுணவாயுவதைபேசுவமே. 68

பேசார்பெரியோரிதன்பெருமை பிராணவாயுமெழுந்தோங்கி
ஆசானதுபோலடிவயற்றில் யரண்டுவுருண்டுகிடுகிடென
மாசாந்திரமொன்பதுமாச்சு மார்நோய்காணுமதுவாந்தி
நேசாநேசம்பிராணனதும் நெடியவுதைத்துநெகிழ்ந்திடுமே. 69

அபாயமெனுமணுகாதிடுலு மனல்கொண்டக்கினிசிரமேவி
உபாயத்துடனிருகன்னமதும் உனேக்குமிடிக்குங்கடுக்குமென
சிவாயநமவெனுமுயிராகி செழித்துவலுத்துடன்பாமாகி
தவமாய்த்தவப்பனீடேற சண்டனுமணுகாவுடலாச்சே. 70

வே று.

சண்டனுமணுகா துடலுயிர்க்காயந்தான்
வலுத்துநமனணுகா
தையலின்மாயை யோனியினுசை
தவறுண்டேதா னதுபோச்ச

வண்டபிண்டகண்ட மெண்சாணுடலுதித்த
மனத்துமே வலுத்துவச்சிரமாய்
அப்புவியாசையது விட்டொழித்து
யாண்டொன்றிற் சிறுபிள்ளையாகி
எண்டிசையனைத்துங் கீர்த்தி
பெற்றியல்பா யெழுபத்தீராயிரநரம்பும்
இறுகியேயெழுகும் அயமதுக்கதித
மெண்சாணுடல் தேகமும்வலுத்து
மண்டலந்தனிலே மானுகாள்வணங்க
மாற்றியதேகம் வேருச்சு
மாய்கையும்போச்சு நிரந்தரசுரூபம்
மனிதரில் தேவனுமாச்சே. 71

நிரந்தரஞானம் தனையதாச்சு
நிரிவியின்கற்பத்தின் பெருமை
நேர்மையோருண்டில் பூருவக்கியானம்
நிலைத்துமேகாயமும் வலுத்து
பரஞ்சோதிவாலை கிருபையினருளால்
பலபலபிணியதும் போச்சு
பசும்பொனினிறமாய் சூட்சுமதேகம்
பாலனுய்ப் பிறந்துபாரதனில்
வரும்முத்தியீசனருளில் நின்றிலங்கும்
மதியெனும்முரியாய் காயம்
வலுத்துமேவச்சிர ரவியதினொளிவாய்
வர்னமுண்டாகி மென்மேலாய்
இறப்பிறப்பதுவும் மிகழ்ந்துமேகாய
மீஸ்பரனெனும் பிறப்பாகி
யிருவினையொழிந்து யிறுக்கியெந்நாளு
மினியொருபத்திய முணர்வாம். 72

இனியபத்தியமாஞ் சிறுவர்கள்
முரியீரெட்டு படியதுகணக்காய்
இசைவதாய் பாண்டமின்னீர்விட்டதனி
லிணையிலாக் கல்சுன்னநீறு

பனியெட்டுப்படிகொண்ட முரியில்தாக்கிச்
சங்கையில்லாமலும் கரைத்து
தனியவைத்ததனை மூன்றுநாள்ரவியில்
தரணிமானிடர்களு மறியா
பனிரவிகாற்றும் வனிதையர்நிழலும்
படாமலும் ரகசியமாகப்
பாகமாய்சதுர்நாள் பாண்டமாஞ்சில்லு
பதிவதாய் தெளிந்தநீர்வாங்கி
இனியொருபாண்டமே தனினிற்றெளிவை
விபரமாய் விட்டுடனடுப்பில்
மிகவுடன்கனல்கொண் டக்கினிவீச
மிதமதாய்த் தீயெரிந்திடுமே- 73

எரித்திடுமணல்கொண்டிடை விடாதெரிக்க
யிரைச்சலிட்டது நுரையெழும்பும்
இனியநீர்சுண்ட யாவருமறியா
தெண்ணையையெடுத்து விட்டினிகேள்
குரித்துடன்பதமாய் குருவைநீபணிந்து
குருமுனிக் கிருபையினருளால்
குறையதும்வருகாச்சார நீர்க்கங்கை
குணகுணமிதை யுரைத்திடவும்
துரிதமாய்முரிசல மெனுமயமாய்
சுடரதின் நாவினுல்வலுத்த
துய்யவெண்ணிறமாய் நந்தியுப்பெனவும்
சொல்லவும்பலபேர்க ளறிந்திடாவண
மிந்துப்பின்மகிமை கற்பத்துக்கிதுவனுபானம்
காரமீனிகேள்கரியுப்பு ஆதிகருதியபிரவிமூன்றுமே. 74

பத்தியம்,

பிரலியின்வாழ்க்கை வாருதியுப்பால்
பின்புதான் கரியுப்புண்டாச்சு
பிலத்துபின்னதனுல் அமுரியுப்பாச்சு
பிசகிலாமலும் பாண்டமதனை

இரவியுப்பீந்து யிறக்கிவைத்த
  ரறியியல்பதாய் கும்பியிலிட்டு
யினியதோர்பாகமடிக் கடியினமா
  யிந்நாள்முதலீரஞ்சு ஆண்டு
மறலிமாண்டிடலும் வினையதுமொழி
  வலுத்திடுங்காயமும் வைரம்
மாய்கைவிட்டகல யிருவினைபிரிய
  வகையிந்தப்படி யறிந்துணர்வோம்
பரையெனும்வாலை யேகவஸ்ததனால்
  பத்தியமெனும் பகர்வதுகேள்
பாசியின்பருப்புகருக் குருவரிசி
  பசுவதின்பாலுடன் நெய்யென்றேன். 75

என்னுடன்மிளகாம் இனியசீரகமா
  மின்னமுங்கரிய வேம்பதுவாம்
இணையிலாக் கொடுக்காப்புளியது
  மெனலாமிசைந்து பத்தியமதுநன்றாம்
இன்னமொன்றாகா யிறைச்சிமீன்கீரை
  மிகழ்ச்சியாந் தாம்பூலம்சுன்னம்
இலைகறிகாய்கள்வஸ்து கெஞ்சாவும்
  இலகியபனை யதின்பாலும்
வென்றிடுதேங்காய் விருக்ஷத்தின்
  கள்ளுமிகநடைபனி மழைரவியும்
விளங்குகூக்குரலு நித்திரை
  கோபமேந்திழை யாசையுமகல
அன்றிநல்லெண்ணை யரவத்தின்விடமாம்
  அணுகினால்மரணம் வந்தமைக்கும்
அகஸ்தியருரைத்த அனுபவமிது
  தானடக்கமா யசடிவாதிருமே. 79

இருப்பதென்றாளு மிடமேவல்பொருளு
  மிருப்பதுமொரு வேளையன்னம்
இகவுமேயாவின்பா லிலாவிட்டால்
  எண்டிசைதனில் வெள்ளையாட்டின்

விருப்பமாய்காட்டு மிகவும்பாலதுவாம்
 மேதினிதனில் கொடுக்காயின்
விவேகமாம்புளியுமிது கிடையாவிட்டால்
 விசிதமாம் புளியிலைத்துளிராம்
அருப்பதுமீறு மதீதமாம்பித்தம்
 சடதாம்புகயிலை யகற்றும்
அதுள்ளவெனவு மெரிதலுண்டாக்கு
 மநேகநோ யமைத்திடுமரிதல்
வருவதும் பிணிகள்
 இறைச்சியுண் டுணர்ந்தால்
வாய்வினால்வதைவருங் கடுப்பாம்மச்சமுண்டுணர்ந்தால்
 வயர்வலிகுன்மம் வருதலுஞ்சூலைபின்னறியே. 77

அபத்தியத்தால் வருந்துன்பம்.

அரிப்பதுண்டாகுமதீத வூட்டினமாம்
 தனலினால் விரிவிரிப்பதுவாம்
அகற்றிடுமிளகா யனுபவித்துணர்ந்தால்
 யதீதவாதங்களாம் வயர்நோய்
வரிப்படும்பிராணன் வலிக்குஞ்சீதளமாம்
 மருகிடுஞ் சுரமெனுங்
தோஷம்வஸ்துவு முணர்ந்தால்
 மூலச்சூடதீதமலத்தினில் கிராணியுண்டாக்கும்
பிரிந்திடுஞ்சேத்மம் பனையதின்பாலும்
 பிணியதாங் கால்கரமுடக்கு
பேசுவோமிரும்பல் யதீதமுண்டாக்கு
 பிராணனை வதைத்திடும்பிலமாய்
கரிந்திடும்தேங்காய் விருக்ஷத்தின்பாலும்
 கருதினால் சோகையும்பாண்டு
கனத்திடுந்தேகம் வெளுத்திடுஞ்சடலம்
 கனலினால் சுரமுமுண்டாகும். 78

கனலதுமீறும் பாக்குவெற்றிலையும்
 கல்சுன்னமிதுவுணர்ந்ததனால்
கண்டத்தில்கோழை சேத்மமுண்டாக்கும்
 கடவாய்தந்தமும் வேறகலும்

புனலும்வேருகும் தனுவெனுங்கோசம்
பொரியுமுண்டாக்கும் நீர்கடுக்கும்
புதுமையாய்ச்சுக்கான்கல் கொண்டுயடைக்கும்
பொல்லாதீபனத்தையு மடைக்கும்
நினைவுவேருக்கும் பிணியுணர்ந்தாக்கால்
நிணமெலா முதிரநீராக்கும்
நிகரிலாப்பேதி யனுதினமிகவும்
நேர்நிலேவேறிடும் நிசமாய்
வனிதையினுசை மயலுமுண்டாக்கும்
வயர்கடுத்ததீத வூஷ்டிணமாம்
மாரியில்நடந்தால் அகோரமாய்
சுரமும்வந்துமே லபித்திடுங்காணே. 79

லபித்திடும்ரவியில் நடப்பதும்நடந்தால்
நாவது வறட்சியுண்டாக்கும்
நமையதுமதிகம் வேர்வையுண்டாதல்
நன்விழி கேதமும்பாழாம்
சமித்திடுந்தாபம் கோபம்வந்தணுகும்
தணலினுல் கோரமாஞ்சுரமும்
சங்கையுண்டாதல் தலேயிடியிடித்துத்
தாதுவில் சுவாலேயுமதிகம்
கபமதுவழங்கும் காற்றினில்
கதித்தால்கருவிகள் தொண்ணூற்றும்
கால்கரமசதிவுதிரஞ் சுண்டிடுதல்
கல்லடைப்பதுவு நீர்கடுக்கும்
செபித்திடும் பிணிவந்தடுக்கையால்
ரோசிதினந்தினம் வெள்ளேயோக்காளம்
சடமெலாங்குடைச்சல் மூக்குநீர்பாச்சல்
சலதோஷம் சிரசிலுண்டாமே. 80

கற்பமுண்ணநாள் முடுகுவிருத்தம்.

உண்டுணர்வதாகி னுலகந்தனிலுயர்ந்த
கண்டுமதுசாரையெனுங் கற்பமுணர்வீரால்

பண்டியல்புதைப்பிறையின் பௌர்ணமிநாளில்
உண்டிடுமூன்றும்பிறையி லுன்னிதமதாமே. 81

உன்னிதமறிந்த முரியுற்பனமதாகில்
இன்னிதமிகுத்த தொழிலின்பெருமைகாண்கில்
அன்னியநிமித்தமிது யாரறிவர்சித்தர்
வன்னிபதிகற்பமுணர் வாலேவயதாமே. 82

மாதுபிராமியருள் மலர்க்கமலமீதில்
தாதுவைராக்யசுழி சந்நதியின்மூலம்
வேதமெனும்சுத்தகச மாமதியின்சூட்சம்
பேதமறவிந்ததித பிரபல்யமாமே. 83

வித்தநிதவாருதியில் மேருவெனுஞ்சாரல்
அந்தபதிசாகர மடுத்தகரையோரம்
வந்தநரனீரிலிசை மானுகளில்சோணர்
அந்தணர்வின்முத் துணர்வதாகில்வானமே. 84

முத்துகளிரத்நவகை முப்பொழுதுமுணர்வார்
அத்தொழில்கடுத் துதிரமுத்திதனவாரி
சுத்தமதிபாரைதொடு மத்தகடலூறி
உத்தமரிசைந்துலகில் உச்சிதமென்பாரே. 85

உச்சிதகடவுள்குருவி வுப்பதெனுங்கொள்கில்
இத்திசையில்பண்டிதர்க் கிசைந்தவிழ்தமென்க
மத்துனர்கள்வாதியெனும் மானுகளின்வாரில்
வைத்தவருளீசனு மமைத்தபொருளாமே. 86

பொருளினைகல்லுப்பறிய பொன்மகமேராகும்
உருவதீதமின்பெருமை வுணர்வதெளிதல்ல
பருவமணிகடலேயிடை பாகமெனுஞ்செய்கை
மருமதியமமுரியடி வகையதுகாணுதே. 87

படியமுரிநாலுமொரு பாண்டமதிலிட்டு
அடியெனும்பூரீரி லரைபடியதெனுந்தாக்கி
வடியயறுபதுகடிகை மதியமுரிதெளிய
மடியநிலவுப்பதனை மதியிலிடுவாயே. 88

மதியிலிடுவன்னியொரு வகையதுவின்கம்பால்
அதீதவிதபெரியவனல் லமுரியதுசுண்ட
இதியிதெனும்வாருமிக விப்படிசெய்வீரால்
நிதியகடல்வாரியுவர் நீங்குதலையாமே. 89

உவரகல்பாரைநிலை யுப்பதிதசுத்தி
யெவருமறியாமலு மீரஞ்சுவிசைதீக்ஷை
கவரதிதகோடி கணக்கில்லைகடலுப்பில்
சவமெனவெழுந்து மூயிர்தானதுவிளம்பே. 90

விளம்பும் செயநீருவெடியுப்புவொருசேரு
ருவளம்பெற பூதிரதுவகைக்கொருசேரு
திளம்பெறவெண்காரமெனும் சேரதுவுமாகும்
இளம்படிகஞ்சே மிகுசாரமதுசேரே. 91

சாரமதுவோடிது வகைக்குசமனுகும்
கூறரியநாலுவகை குளிக்கல்லில்தாக்கி
ஆறரியதாகமதிய முரியதனலே
வீரமெனுமூன்றுதினம் விடாமலதையாட்டே. 92

விடாமலதிலிட்டு மெழுகுபதமேயாதல்
உடாமலும்வழித்துணர்வீ ரூகவையதுவாகட்
படாமலுமேசேருவகை பாகமதுநாலாய்
சுடாகமெனும்பில்லையது சூட்டிடுமிதாமே. 93

சூட்டிரவிதன்னில்மிக சூடுபடவாட்டிக்
காட்டிக்கனலேறத்தழல் காய்ந்ததன்பினேட்டில்
வாட்டியடிமேலு முறவாகவும்பதித்துக்
கூட்டியமண்சீலையது குக்குடமதாமே. 94

குக்குடமதாகவகை கொண்டுபுடமாறி
விக்கிரமெனும்பில்லையது வெவ்வேறதாகி
உக்கிரமுடன்குக்குடம் தோன்றுமேயாகில்
சக்கிரமதெடுத்ததனை சாற்றிடலுமென்றே. 95

சாற்றியகுழிக்கல்லதனில் தானதனைத்தாக்கி
மாற்றிடுமரைத்துப்பொடி மயனமதுவென்னில்
பேத்திடும்பீங்கான்தனில் பின்பதனையூட்டிப்
பார்த்துவைவீயதனில் பக்குவமதாக்கே. 96

பக்குவமெனும்பனியில் பாகமதுவாக
இக்கனியசுன்னமிது யிப்படியிரஞ்சு
வைக்கசெயனீருமது வேகமதுவேகம்
புக்கவேதினந்தினம் புகழ்ந்துசலம்வாங்கே. 97

வாங்கிடுஞ்செயநீரு வளமாகுமொருகுப்பிப்
பாங்குபெறவேயதனை பக்குவமதாக்கிச்
சாங்கமிதுபாரை நிலவுப்பதனைக்கொண்டு
தேங்குகுழிகல்லிலொரு சேரதுவும்பூட்டே. 98

சேரதனைபூட்டி செயநீரதுவும்தாக்கிக்
கூறொருநாளாட்டிக் குழித்துமெழுகானால்
பேரிதனைகொண்டுமிகப் பில்லையதுவாக்கி
நாரியர்நிழலணுகார விமுகத்திலாட்டே. 99

முகவனருத்பணியார விமுகத்தில்தழல்சொரியப்
புகழுங்கதிர்முகவசியம் பூட்டியெழுவாரம்
மிகசதிரோடதனில் மேஷம்வருகாமல்
விகடமணுகாமலும் விதிப்படியதாக்கே. 100

விதிப்படிமேலோடுறவே மேலுமதுமூடி
நிதிப்படிமண்சீலையது நேர்மையதுவாக
மதிப்படிதரித்தியதின் வாய்ப்படியவூதி
முதிரிமுனைதவரிடுகா முன்பதனைவாங்கே. 101

வாங்கிடுமிந்தவித மற்றமருந்ததனை
தூங்கிவிடுகாமலுமே சுத்தசலப்பனியிற்
பாங்குபெறசுத்தசலம் பாச்சிவிடும்பீங்கான்
நீங்கிவிடுகாமல் நிலவுப்பதிநீரூட்டே. 102

ஊட்டிவிடுநீரதனி லுப்பதனின்சுன்னம்
காட்டிவிடுமன்பெரிகி கல்லுப்பதின்குளம்பை
நாட்டிலறியார்கள் தினஞானியவர்கூர்மை
பாட்டிலறியாமல் பறைபாரையினுப்பாமே. 103

உன்னிதமுரைந்துகன லோடியனல்தாவி
கன்னியபிராமியருள் கற்பனையினாலும்
இன்னீர்சலமாமதி யிசைந்துயரைநாட்டி
சென்னிலமணலாமிதி லிசைசிந்தித்தருள்வாயே. 104

சிந்தைய ணுகாது சிவகாமியருள்பாதம்
வந்துதொழுதேபணிய மண்டலமண்மீதில்
கண்டுதினம்பூசி கனிவர்க்கமறுசுவையும்
மண்டலம்வைத்தேயுணர் வஸ்துவிதுவாமே. 105

க ல் லு ப் பு.

வைத்திடுபீங்கான்தனில் வா னுசலநீர்மேல்
சித்திரக்கல்லுப்பதுவின் செய்கைய துகாண்கில்
முத்துவின்சுத்தவெளிர் வைத்துபனிநீர்மேல்
கர்த்தநடனம்புரியும் கல்லுப்பிதுவாமே. 106

கல்லுப்பிதுபாரை கருகண்டனர்கள்வாதி
அல்லும்பகலுமொருவ ரருகில னுகாமல்
நல்லசலமேற்பட்டரு ணன்மலர்பூஞ்சூட்சம்
தொல்லைவினையாதிதமுஞ் சூழ்வதிலையென்றே. 107

சூழுமதிப்பாரையது சுத்தபனிநீர்மேல்
வாழுமொருமண்டல மதுப்படிகம்போலாம்
நீழுலகிலும்புகழும் நேர்மைநிலவுப்பை
தாழ்வுதலில்லாமல் தகடாய்விளையும்பாரே. 108

விளையுந்தகடாதீதமும் வெள்ளப்பிரகம்போலாம்
களையதீதம்பதினறு காந்திமதிசூழுங்
குளையெனவுங்குப்பிதனில் கொண்டதனைத்தாக்கி
முளையெனவுஞ்சூட்டி மிகமுத்தமதில்வையே. 109

குருகடாக்ஷம் பின் ரா. என்று பாடியது.

முத்திதரும்ஞான வழிமூலச்சுழிமீதில்
சத்தியபிராமியருள் சதுர்க்கமலபீடம்
வெற்றியருள்மத்தகச சித்தர்மணிவாசல்
நித்தமலர்பொழியிரவி நிர்மலமுங்காப்பாம். 110

நிர்மலநிரந்தர நிராதரசுரூபி
கர்மவினைதுர்ப்பவித காமிதவிரோதி
வர்மவுவரைந்துகடல் வாருதியினுலும்
மர்மதிசூழுமணி மகுடமலர்காப்பாம். 111

மதிபெருகிக்கதியடைய விதவிதமெய்ஞ்ஞானம்
விதியின்னமைப்பது விசிதவிந்துமதிசாரம்
விதியின்மறைந்துபொழிய சுழியின்முனைமீதில்
பதியமலர்சூடியருட் பானமெனும்பணிவாம். 112

வேறு.

கருவிகள்தொண் ணூற்ருறு நிர்மலமாய்
கனலெனு மதியுணர்ந்ததனுல்
காயம்வெவ்வேருய் சனனமுண்டாதல்
கனரத்தன வொளியறிய
மருவிமும்மலமுங் கருகிநீருகி
மதுரசஞ்சீவி யென்னமிதம்
மதினிலவொளிவாய் சுழிமுனையிடபின்
வலமிடங்கதிர் மதிசூழும்
வருமதவாரி பொழியுமும்மலமு
மாய்கையுமகிழ்ந்து சஞ்சலம்போய்
மதியெனும்ரவியை மனம்புணர்ந்துணர்
வாலையி னடிபணிந்தருள
குருமுனிமதுர வாக்கியத்துணர்
வாலைகுண்டலியெனு மலரக்கமலம்
கும்பமென்றிலகும் அகாரகாரணத்தால்
குஞ்சரமுகனையே துதிப்பாம். 113

குஞ்சரத்தகித மதுரத்தேனின்பங்
குண்டலி வல்லமையிலகும்
குகைவளங்கரிய பிராணவாய்வதுவும்
குடியிருந்திலகு மானகரில்
நஞ்சரத்தமுத பஞ்சபூதியமும்
நடனவுல்லாசமே புரியும்
நாதவிந்துசித கருநெல்லிவளமும்
நன்மதிசாரை வெண்சூழுங்
கருணைமெய்ஞ்ஞானம் விதிப்பதாலினிய
கனியெனும் வமுதெனுங்கருத

விஞ்சையின்பெருமை விதிப்பதால்முன்னோர்
விட்டடிதோட்ட தோர்தசையால்
விளங்கியவன் னிரவியோனி
மேவுமிக மூலப்புளியிருந்திடமே. 114

மிகமூலப்புளியு மமுரியினியல்பாய்
மென்மேலுங் கட்டதீதபாயமுந்தி
விளங்கிடுஞ்சாரை யரவத்தால்மடங்கி
வேகுண்டஞ்சு தலைகைப்பாம்பை
யுகமையாய்ப்புணர சுரேசன்னமதா
யுகாரமென்றது புளியுணர்மாய்
யோராண்டுபின்வாங்கி ரவிதனி லுயர்த்தி
யோரிடியா யிடித்ததனை
ஜெகமனிதர்களும் யாவருமறியாச்
சிலையில்வடித்துச் சூரணமாய்
சிருதயகலசம் அதனில்வைத்தினில் வைத்தினிகேள்
தேவியம்பிகை மலர்பணிந்து
அகத்தீலமரருளா லடிபணிந்துதொழுது
மகாரமா மமுரிகொண்டிடவும்
அருணவுச்சகத்தி லறுவகைநீர்கொண்
டகாரம்விட்டடுகாரமே யுணரே. 115

உட்கொளக்காலங் தாரணையகாரம்
காலையிலா மந்தியி னுகாரம்
அழுகிவிட்டதை யுரமாக்கி
ஆண்டொன்று மிந்தப்படிபிசகாமல்
அடிவிட்டகன்று செல்லாமல்
உகாரங்கொண்டேனே மூலத்தின்வாசி
உங்கென்றுந் தாரைகொண்டுதவ
ஒருகடிகையினில் நவத்துவாரவாசல்
ஓடிடா வாசிகொண்டழுத்திப்
பதறமாயக்க காலையுமிரண்டு
பழக்கமதாக வப்பியாசம்
பதறிடாமலுமே கண்டதாரையினில்

பாகமாயூதிடும்வாசி விகற்பம்வாராமல்
　ஏழாயிரத்திருநூறும் விளங்குமூலத்தினிலிசைந்து
வேறதாய்ப்பிரிந்த சுவாசமொன்ருகி
　மிகவளர்பிறையெனும் வகுப்பாம். 116

முதலாண்டு.

வளர்பிறையிருபத்தோ ராயிரத்தறுநூர்
　வாசியு மூலத்திலிருந்து
வாழ்விக்குமாதல் தசதிங்களாண்டு
　மருவியஅமுரிகொண் டவைபோய்
இளவுருவாக யிரண்டுதிங்களினி
　லிவைமனவாஞ்சையை வேருய்
எழுபத்தீராயிர நரம்புமேவலுவாய்
　எண்சாணுடலாதி தங்கனலாய்
மருவிய்வாசம் பிராணன்மேநோக்கும்
　வாசியும்கால்கொண்டு பாவை
மதிரவியிரண்டும் பிரகாசமேபுரியும்
　மனமொரு முறுதியோராண்டு
கருவருளதனு லீராண்டுமேசென்று
　கனகமாங்தேகமுஞ் செழுமை
காரசாரத்தைப் புவிதனில்மாந்தர்
　கவைக்குதவா தெனப்பழிப்பார். 117

இரண்டாவதாண்டு.

பழக்கமதாக வாசிமூலத்தில்
　படிந்துமே நாதவிந்ததனில்
பறியதாச்சொரூப மாத்திரண்டதுவாய்ப்
　பரப்பிரம்ம வொளிவதாய்ச்சயிலம்
அழகென்னசிசுவாய்ப் பாலன்போலுருவாய்
　அகார வுகாரத்தினருளா
லக்கினிச்சுவாலை யனலினுலெடுத்த
　அசடிலாக் காயமென்றதுவாய்

உழுவில்வெள்ளாமைப் பயிரிடுவிளவாய்
உகமையைப்போ லுருவாகி
வுகாரத்தாலமுரிவலுத்து கண்டதுவாய்
உயிருட லொன்றதாய்ப்பொருந்தி
செழுமையாய்ரோகம் யருணநுட்பதமாய்
தேவியம்பிகையெனும் வசியம்
செடலமாதிதமும் ரவியொளிபகலாய்
தெளிவதாமிருளும் போம்மதியே. 118

மூன்றுண்டு.

இருளதுமாறி மதியொளிவாகி
யிராவினிற்பளிங்கது போலாம்
இரண்டுடனுண்டு சென்றுபோய்மூன்றில்
இனியென்ன யிருதயமன்றறிய
பருவமாமமுரிநிறமென்ன சீசெழுமை
பருதியாம் முதல்பக்ஷங்காலே
பாகமாயருளடிக்கடியருவி
பழமைமுன்வருவதும்வருகா
உருவதாய் மூன்றுவேளை தான்வருதல்
மூல்த்தின்புளினயச் சூரணமாய்
ருசிகியமாய்ப் பீங்கான்தனிலிட்டுமமுரி
மூன்றுசாமங்கள் சென்றபின்
உருவெனுமிரதம் தனிலிட்டுறவாய்
உண்டையுஞ்செய் துணர்வீரால்
உணர்வறிந் துண்டுபிராண வாசியைத்தான்
ஓமென்றுங் கும்பித்துவூதே. 119

ஊதிடுந்தாரை வுறக்கங்கொண்டாகா
உறக்கவுங் கூக்குரலாகா
உறுதியாய்க்கண்டந் தனிலுமேவாசி
ஓசைகொண் டொருவர்தானறியா
ஆதிபுமந்தநாத விந்ததுவே
வண்டபிண்டங்களு மதுவே

அப்புவுப்பதுவே கருநெல்லிசாரை
யகாரவுகாரமு மதுவே
கோதிலாக்காரசாரமு மதுவே
கோசமும் பீஜமுமதுவே
குருமுனியருளால் புலத்தியன்விளங்கும்
குவட்டிலைச் சித்தர்கள்பணிய
வாதிகளறிய கற்பசூத்திரத்தை
வைத்துப்பூசித்து பரர்தனிலே. 120

பாரினில்மூலப் புளிசன்னமுரைக்கப்
பதினெண்பேர் சித்தர்களுமகிழப்
பணிந்துயான் துதிக்க உலகினில்சரக்கைப்
பக்குவமா கவுமினிகேள்
ஆரிறியாமல் கருநெல்லிக்கனிதான்
யரிவிந்துவெனும் மைப்பதருல்
அதுஒருமணங்கு யெவரறியாமல்
அடக்கமாய்க்கொண் டொருபாண்டம்
நேரதாயடக்கி நதிசலம்வாங்கி
நேர்மையா யிருமணங்கிடைதான்
நிரையசாலதனில் யிருவிதபாகம்
நிர்மலமதனையே புகட்டி
வேறுறவில்லா அறுபதுநாழி
மிகவுஞ்சேர்ந்தது வெனுமூர
விளக்கவாய்ப் பிசைந்துபின்பறுபதுவும்
மேவியே சென்றபின்விளங்கே. 121

விளக்கமாய்ப்பிசைந்து பின்புமுன்றதுநாள்
மிகதெளிந்தது சுத்த
சலமாய்விதரணையாக மண்ணிதுதெளிந்து
மென்மேலு மின்னீர்தனைவாங்கி
அளம்பெறசுக்கான் பாளையங்கோட்டை
யதுக்குதென்பாரிசம் விளைவு
அதுமூன்றுகாதம் சென்றுமேநடக்க
ஙருவியதிருகுருங் குடிதான்

நிலமுலாவிளதும் மறவர்தன்னுடும்
　நீள்புவியதற்குத் தெற்கதுவும்
நிகரிலாபூமி மலைவளம்புரியும்
　னின்றிடுங்குன்றது வளப்பம்
விளைமலைச்சாரல் அதுக்கடிவாரம்
　வெட்டுவார்சுண்ணும்பு பாலாம்
வெண்பளிங்கதுவாம் புஷ்பராகத்தின்
　விளியசந்திர னொளிவாமே. 122

ஒளிவென்னமதியும் பிரகாசமேயிலகும்
　ஒருமணங்கது சுன்னநீர்தான்
தெளிவுடன்வடித்து திவ்வியமாயிறக்கி
　செழும்வன்னி மூட்டியேயடுப்பில்
தீர்க்கமாயனல்கொண் டக்கினிவீசத்
　திரமதாய்க் கனல்கொண்டுசூட்டி
வழியவும்நுரைதான் வரும்பதம்வாங்கி
　வரவரப் பின்னுமாறுமல்
மதிசலஞ்சுண்ட யெண்ணைவத்திலகும்
　மகடெனு முவர்க்கசடெடுத்தே. 123

எடுத்தெடுத்துணர்வா யினிபதமாகில்
　இலகியநாத மென்பிரதம்
இசைந்துகுங்குமம்போல் நிரமதுவொளியாய்
　இருப்பதினியல்பு கண்டினிபின்பெடுத்து
டனிறக்கி ஆறவைத்ததன்பின்னிதனிப்
　பார்த்திடுமளவதனில் அழகியநிறமால்
திருவெனுமொளிவாய் அரிதளம்போலுமேபரிதா
　னகற்றிடிலிதுவும் அதீதமாய்ப்புளியில்
கடுஞ்சுன்னமெனுங்கருவிதுவாம் கரையிலாத்தொந்த
　மீரஞ்சுதிறத்தி கற்சுன்னம்படியதுமொன்று
தடுத்தடாமலுமே சலம்படிநாலிதன்னீர்
　தெளிந்ததுசெலம்வாங்கி
சலத்தெளிவதனில் புளிச்சுன்னங்கரைத்து
　தனியெடுத்ததனைவைத்திடுமே. 124

எடுத்திடுங்கசிவு மெண்ணையுமதீதம்
லேக்கியப்புளியதின் சுன்னம்
இப்படிசபத்தினிய கற்பனையாய்
யியம்பிட வெண்மதிவெளிருய்
அடுத்துறவாக யதிதசுன்னமதாய்
அற்புதமாகவும் வுரைக்க
அருட்படிகாரம் வெண்காரமுஞ்சாரம்
யதீதமாம் வெடியுப்புபாரை
தொடுத்துடன்வகைக்குச் சமனஞ்சுபலந்தான்
சுகாதீதமாகவு மெடுத்து
தொடுத்தொருபாண்ட மதனிலிட்டிதனை
சுயம்பெனும் புளிச்சுன்னவகைக்கு
கொடுத்திரு பத்து
அஞ்சுமேயுறவாய்கூறிய யன்பதுபலமும்
குறித்துமே பாண்டமிட்டிதனை
குருவெனுமமுரி விட்டுவுறவே. 125

அமுரியீராறுபடியளலிட்டி
யறுபடிகல்சுன்னமதனில் அளந்து
நீர்தாக்கி கரைத்துறவுணர்ந்து
அருட்பெற மூன்றுநாளதின்பின்
அமுர்தவம்பிகையின் பாதமலர்போற்றிரவி
படாகாற்றுறவாமல் ரகசியமெனவும்
மடக்கமாயில்லம் நாள்கழிந்ததுசதுர்நாளில்
தமுதயமாக பாண்டத்தினடுவில்
தமரொன்று தவறிடாமலுமாய்
சங்கை யில்லாமல்
பெருத்ததாய்ப் பாண்டஞ்சலமதி
லிரங்கவிட் டிசைவாய்
குமுறிடாமாலுமே தெளிவுநீர்வாங்கி
குறைவராத டுப்பில்வைத்தெரிய
கொடூரமில்லாமல் ஒருமரக்கொப்பாய்
கொண்டுடன் கலம்போல்தியே. 126

கமவன்னியுமே தெளியும்பொதுரையும்
 கடல்னுரையுரவ வதுபோலுங்கசரவெடுத்து
நீர்கள்சுண்டிடு மாங்கல்மசமது
 மெலாங்கழண்டு சோமனென்றுளியாய்
சுகாதீதவெளுறுய் சுயம்பிரகாசமாச்சுவரல்
 சூட்சமிப்பாகம்வருதல் பின்பாகச்சுவரிடு
மிரதல்போல்தயிலம் வாமப்பாலமிர்தமது
 வெனும்பாணம் வளப்பமென்றியல்
புவாஞ்சினைபோய் வஸ்துவாய்நாதம்
 வருதல்கண்டு வறல்வண்மைகண்டு
மளிகொப்பளித்தல் காமப்பாலுணர்ந்த
 கசடருக்கின்னூல் கருதிடில்
கழுதையாய் செனனம்கருவியிலுதித்தல்
 வினையும் வந்தெய்தல்
காட்டொணுதிது கற்பனூலே. 127

கற்பம்பின்னூரில் வழலையின்பெருமை
 காட்டொணு ரகசியஞானம்
கருவெனும்பாண்டம் மிரக்கிவைத்தார
 கனலெனுஞ்சுடரது தணிந்தால்
பற்பமாதா கறவினியுலர
 பாகமாய் வைத்தெடுவாரம்
பளிங்கதுநிரமா யதீதசுன்னமதாய்
 பாச்சிடுங் கும்பியிலடக்கி
மறதனப்பெட்டகத்தில் வாடைவீசாமல்
 வாசமும் வெளியில்வாறுமல்
மதியெனும்விந்து சந்தரபுஷ்கரணி
 வாருதி அப்பு வென்றதிதம்
தர்ப்பரமெனும்பேர் அண்டமென்றிதுவாய்
 சதாசிவன்சிரசில் கெங்கையதாம்
சாரமாயிலகும் வைகை
 தாபறமெலாம் நிறைந்தொளிவே. 128

உப்பின் பேயர்.

நிறைந்ததற் சொரூபரோமநீர்
வூசிநீரூமயநில வுப்பென்றிதுபேர்
நிரூதரமெனு முப்பமுரிபஞ்சாட்சரம்
நிகரிலாவுப்பிதை வுரைக்க
விரைந்தமா வெனுமே
நடுவணையெனு மாய்விளங்கிய
அவ்வெனு மெழுத்தாய்
மேதினிதனிலே பாலர்கள்
அமுரிமூன்றுபத்திரண்டு சிறந்திடாமலுமே
செய்வினையுணர்வாய் செப்பிய
பாண்டமென்றதுவாய் தெளிவிட்டதனில்
கல்சுன்னநீரு திருத்தமாய்ப்படிபதினுரு
வரந்தரும்வாலை மலர்திருபத்தில்
மருவியாராதனை செய்து
வமுரியில்தாக்கி மனதுசஞ்சலியா
மதுதனைக்கரைத்து வைத்திடுமே. 129

மதுதெளிந்துவர்போய் மதுரசஞ்சீவியாம்
அமரியின்கசடெலா மகண்டு
வாருதியுவர்போய் சுத்தகெங்கையதாய்
வஸ்துவென்றது வொளியதுவாய்
இதுசதுர்நாளில் யிணையிலாமலுமே
யெடுக்கவுமிதுக்கடி நடுநேர்
யிசவொருபாண்ட மிகவும்வைத்திருக்க
இனியநீரறுவிபோல் செலமாய்
அதுமையத்துவாரம் பக்குவஞ்செய்விதமாய்
அண்டமென்றது திருமாலாய்
யமுதமாய்ப்பரவி நதியதாய்த்தெளிந்து
ஆரதாய்ப்பெரிகி யவ்வழியில்
சுதனருளிலகும் முத்ததுக்கதிகம்
துய்யவெண் மதிநிலவாகி
சுயம்பிரகாசமெனுங் காரசாற
சுகாதிதப்பே ரின்பமெனுமே. 130

வ ழ லை யு ப் பு.

மெனுமருசுவைநீர் யிருவகைசெயநீர்
இலகியதிராவக செலநீர்
யெடுத்தகமெனுமே யிகலதாயுணர்ந்து
இடுமவன்னி கமலம்போலிசைந்து
கனம்பொருந்திவைநீர் கனலெனுமெதுவாய்
கசடகத்ததுனுரை விலங்க
கருதிடுமதுசூழ் கண்டுபோம்பொழுது
கண்ணுடியிலகு பொன்னுருவாய்
இனமிதுபாகஞ் சுவறிடுமினங்கண்
டிறக்கிவைத்தாரச் செய்திடும்பின்
யிடைதயிரதுபோல் யிரகிவுப்பதுவாய்
ஏகாட்சரமெனும் பொருளிதுபார்
தனமறிந்துணற வழலையுப்பிதுவே
தணலதும் ஆரிசாந்தகமாய்
சாறயிந்திரிய பஞ்சாட்சரமெனுமாய்
சாத்தியவாரு கண்டிடுமே. 131

சாரமென்றிதனை குப்பிகொண்டடக்கி
சங்கையில்லாமலும் ரவியில்
தறணிமானிடர்கள் யனுசறியாமல்
தானதைவாரஞ் சென்றெடுத்து
காரமுஞ்சாரம் நாதவிந்தெனுமாய்
கல்லுப்புவெனுங் கருத்ததனல்
கதிர்மதிசுடர்தான் வழலமுப்பிதுபேர்
காட்டொணு ரகசியமிதுகாண்
வேறேவொன்றிலைபார் யடுநடுமுடியும்
விளங்கினேம் யகத்தினருளால்
மேதினியிலகும் வாதிகாள்
இதன்பெறவெவ்வேறதாய் விதித்தனர்விழலாய்
பாறையுப்பறிந்து பாகங்கண்டறிவோர்
பருதியென்றதை மதியறிவார்
பலபலனாலும் யிதற்கொவ்வாசூட்சம்
பரமெனும் மறிந்தறியாரே. 132

போய்யர்கள்.

அறிந்தறியாம லம்புவிமனிதர்
யனந்தஞ்சாஸ்திரங்களு மாய்ந்து
அகப்படாதருவுங் கருவறியாமல்
யகண்டகடாகமுந் திரிந்து
பறிமயமாசைப் பிடித்து
பேய்ப்பித்தார்போல் பாரில்மானிடர்களைமயக்கிப்
பலபலசரக்குங் கறிக்கிசுட்டதர்ப்பின்
பணம்பறித்தோஷியே பாரில்
வெரிபிடித்தவர்போல் வேடங்கொண்டலைந்து
வேசிமார் மயல்மிகவிம்பி
விறகமதாகி கள்ளுடன்கெஞ்சா
விதம்விதம் வாமங்கொண்டலைந்து
நெறிதவம்மறந்து வாய்மதம்பொழிந்து
நிலையறியாமலும் ஞானம்
நிகழ்ந்திடும்ணுய்போல் குலைந்துமேதிரிந்து
நிதம்நிதம்புலம்பியே வாழ்வார். 133

வாழுவதிலைபார் வழலைமுப்பதீதம்
மருவியமுப்பதும்மூன்றும் மறப்பிலாமலுமே
ஞானவானவர்க்கு மதிரவிசுடறதுவஸ்யம்
தேனினுமதீதம முரியினுப்பு
திருத்தமாய்பலமோரு யிடைதான்
செய்கைவாசனையால் புளியெனுமலவணம்
செழுஞ்சுடருப்பதாம் பாரை
உளிக்கடங்காது கல்லுப்புலவணம்
வொருபலம்வகைக்கு மேசமனுய்
யுருவிதுபிர்மாவிஷ்ணு ருத்திரனும்
மொன்றதாய் குழிக்கல்லிலடக்கி
விழிமடமாது வழலையைத்துதித்து
வெடியப்பின்செயநீர் விட்டதனை
விடாமலு மொருநாள்
ளிணைவிடாமாலுமே விகர்ப்பம்
வாறும லாட்டிடுமே. 134

விகற்பம்வாருமலிடைவிடாததனே
  மிகவெனு மயனமதாக்கி
மெழுகெனும்வரு தலுகமையதாக
  மென்மேலதாயாட்டியே வழித்து
புகலிருவட்டம் மெழுகையுமெடுத்து
  புனிதமாய் றவிமுகந்தாக்கி
புனல்சொறிந்திடவும் கனல்படத்தணியில்
  யுகழவும்வைத்தொருவாரம் யகமகிழ்ந்தருளும்
யகத்தியரருள்தன் யருள்மலர்முதபொற்கமலம்
  யர்ச்சனைபுரிந்து யகலதிலடக்கி
அவ்வகல்வகலது மூடியிகபரகெதியில்
  லகிலமும்புகழுமிதுக்கு மண்சீலையுமேழு
யிசைந்துசந்திகழா பிறவியிலுணர்ந்து
  யெடுத்துகுக்கிடத் தினியம்பே. 135

சுன்னஜெயநீர்.

இயல்புடம்புகட்டி எடுத்வகலாற்றி
  யிதர்க்குள்ள சுன்னம்பார்த்திடினும்
எளிதல்லமுப்பு வுலகத்தோரரிய
  யெறப்பிறப்பது பிரிந்திடினும்
சயலதுமறியதந்தையின் விதியால்
  தவப்பயனரிவதுங் கடினம்
சாத்திரமாரும் வேதனுல்
  மறையும்தத்துவ மாயந்ததுமேகடினம்
குயில்மடமாது கொங்கைமின்னாளர்
  கொஞ்சும் றஞ்சியெனும்வாளே
தோகையம்பிகைப் பெண்ணமிர்த
  பொற்கமலங் குறித்துடன்தொழுது
அர்ச்சனையெய் மயில்மலர்சூழும்
  மறகதபச்சை வழலையெண்டிது
சுன்னமெடுத்து மதிமலர்சூடி
  வலித்திடுங்கும்பி வசமதுள்ளடக்கிவைபதனம். 136

யதனமென்றதனில் பலமொருயிடைகாண்
பாச்சிடுங்குளிக்கல்லில் பதமாய்
யரங்கிவைப்பது நவாசாரமந்திடைதான்
பச்சைகர்ப்பூர மந்திடைதான்
மசனசவ்வாது கஸ்தூரியும்புனுகும்
மயிலனிரமது வண்டுபசமை
வருகனென்றதுவே வகைகைதைசமனுய்
வழலையுப்பய முறியின்சாரம்
சுதனருளாவின் கோரோசனையதுவுஞ்
சூட்டிடு மயனமதாக்கி
சுயவசீகரமாந்தூய்ய வெண்பீங்காண்
தொடுத்ததிர் பனியில்வைத்தினியார்
உதகமென்றிரதஞ் சயில்திருவகமா
முன்னிதசெயகீர் சுத்தவமிர்தம்
ஓரிருமூன்றுநா ளறினமதிநீறு
கைமாய்க்குப்பியி லுணர்ந்தே- 137

உணர்ந்துவுன்னிதமாய் ஜலமெவா
மெடுத்துவொன்று மில்லாமலுமுகமை
வுருவரிந்துசித மருவிதமரியத்
தொடனொரு பாத்திரமதனில்
கணல்சொறிந்திடவும் சவ்வீரம்
நால்களஞ்சி தனைபொடித்தகமையதாக்கிப்
தனிறலி வாலைதம்பனமது
வேதவப்பயனுகவும் கதிரில்
குணவிசிதமதாய் பாவிணைப்பதமாய்
குறித்திடில் முருக்கம்பூவதுபோல்
குருமுனியருளால் யொருதினமதனில்
கொடியசுன்னமதாய் விளங்கும்
இணையிலாவதீத வழலையென்றிதுவாம்
மெட்டெட்டேபருவத்தினுலும்
மீறியேபொருமல் குளிகைசாரணைக்கு
மிகப்பளிங்கது நிறகிவளுரோ. 138

வெளுத்துநீறுதல் மதமரிந்தியல்பு
  வெண்மதிகுப்பி லுணர்த்தி
வெருபதனமதாய் யடக்கம்வைத்துடனே
  வேதாந்தியாய்ப் புனிதனில்
வியன்றபழுத்த அஞ்செழுத்தாய்
  யமுரிபிலுணர்ந்த பழப்புளிமூலமென்
றெழுத்தால் பருபரன்பரையு
  மிருவகையதனில் பாச்சிடும்வழலையுங்கடுகு
மெழுத்ததற்கியங்கி யின்பமாங்
  கனிகொண்டெண் சாணுடல்வலுத்து
வச்சிரமாய் யிருவகையெழுத்தா
  யியங்குதலதிதமினி யுரைத்தடவிளங்கறிய
தளதளத்தசைதல் பிறஞ்சுவாய்
  வுந்தனணைத் தாளெருவழி
தனித்தல் சதுர்மறைவெத
  சுயப்பிரகாசசைதன்னிய தேகமீதாமே. 139

நாலாமாண்டு.

தேகமெண்சாணுஞ் செழுமையதாகிச்
  செழுங்கனல் கதிர்மதிசூழ்ந்து
செடலமதீத முயிருடன்வலுத்து
  சிவகெங்கை நதியெனவியன்ற
யேகமென்றமுரி ஆண்மூன்றதுபின்
  நிருவிதக் காரமுஞ்சாரம்
இரதமெருருகரை பிரண்டொடி
  நிடம்வலஞ் சந்திரசூரியனும்
புகழ்சதுருண்டுமுதல்படிகடந்து
  பூரணரவிமதிசேர்ந்து பூதாதிஐந்தொன்றாய்
பிறிதீவியின்மூலம் பிருணவாய்வது
  புகழ்ந்திருந்து முகனையதாகி
அகண்ட தாரையிலும்
  முனைசுழியிலட பின்னுமாவா
முச்சந்தி விடுமெதிரவிபிட
  மூலாபிய தாரையிலுதே. 140

## யோகதாரணை.

ஊதிடுக்தாரை யகண்டதோர்வாசி
 வுலாவிய வுஉவழினேசம்
உறக்கம்நித்திரைபோய் சோம்பல்வீம்பலும்போய்
 டிடல்தொண் ணீற்றுருமே
விட்டவிடஞ் சோதியின்பெருமை
 யகார காரணத்தில்
தினமொருகாலையுமாலை திருத்தமாயூதீ
 ஓங்கார காரணத்தால்
தியானம்வைத் திருகடிகையுமாயோதி
 யூதிடுவாயகாரகாரணத்தி லுகாறமாங்
கற்பத்தைமறவா உவ்வெனும்
 அவ்விலுயி ரெழுத்தாட்ட
முடலுயிரென்றதாய் போச்சு
 சோதியென்றமுறி சுழிமூலப்புளியுஞ்
சுகாதீதகற்பத்திருந்து தாங்கிடும்வாசி
 நாசியிலணுகா சொக்கிடாமலுங்கண்டத்தூதே. 141

கண்டதாரையினி லூதிடும்வாசி
 கபாலத்தின் வழியதாய்ச்சென்று
கருவலமாகச்சூழ்ந்து பின்னிடமாய்
 கருதிவைத்தது வொருகடிகை
அண்டமும்வலமாய் யாருதனையதுசெய்
 தாக்கினை யிடகலைபுரிந்து
அசவுமென்மேலாய் யடிபணிந்தருளி
 அதுவொருகடிகை தான்செபிக்க
மண்டலமுழுதும் பிரகாரத்தின்விசிதம்
 மணிவிளக்கதிக சோதியினில்
மதியிருந்தோருமை கடவுளினருமை
 வாசிநின்றாடிய னேசம்
சண்யினுமணுகாண் நமனென்பதேது
 சாத்தியமசாத்தி யமுமேது
சதாசிவப்பகவான் நடனஞ்செய்திருப்பார்
 சாயுச்சிய பதவியுமாமே. 142

பதவியும்நாலு கடந்தகத்தீசர்
   பாதசொற்கமல பங்கயத்தில்
பணிந்திருபாதமலர் மணிவாசல்
   பற்ப்பம்நீரூடிய னதியில்
முதலிருமூன்று நான்குதிட்டையுமாய்
   முத்தியுஞ் சித்திபெற்றயன்று
மும்மூலச்சுழியில் முனையில்நின்ருடி
   முப்பாழுக் கப்புரந்தாண்டி
யிதமஞ்சுகாய கற்பமஞ்சாண்டு
   விழுப்புவழலை யுப்பணுகு
விளங்குவதெதற்கு கருதொட்டுபிரும்ப
   விசிதமா யருசுவையத்த
மதனமாமவுனவஸ்து பேரின்ப
   மதிவிளங்கி யறவியிரண்டு
   மதிவிளல்கி யறவியிரண்டு
மாறிமாறிடபும் வயல்ருனூரு
   மாத்துமஞ்சாவ தஞ்சாண்டே. 143

வே று.

ஆண்டுமின்னூற்றுஞட்கழிந்திடில்
வேண்டுஞான விதித்தகற்பத்தினுல்
மூன்றமாறமுப் பாழுநீருகிடும்
மாண்டுபோவதும் வைய்யத்திலில்லைங்ய. 144
வைய்யத்தாசை மயக்கமற்ரோர்களுக்
கெய்வதென்னக் கிலேசமொன்றில்லைபார்
துய்யவெண்மதி சோமநீர்சூட்சமே
அய்யமேது யஞ்சாச்சுதுமாத்துமே. 145

வே று.

மாத்துமஞ்செனிலும் மறுபடாதேகம்
   வாசியும் வசமதாய்வழங்கும்
வளர்பிரைமதியால் மவுனம்வந்தெய்தும்
   வாருதியுவறது விலங்கும்

சாத்தியஞானக் கவியிருனூறு
  சங்கையுமாய்ந்திடும் புனிதர்
தன்னுக்குள்விளங்குஞ் சைதன்னியக்கருவை
  தரணிமானிடர்களி லொருவன்
பத்திரவானுய் பனிரெண்டாண்டடுத்து
  பலபலநூல்களுப் படித்து
பரிதியென்றறிந்து மதியுரவாகிய்
  பானமேகெதியெனப் பணிந்து
கார்த்துசர்க்குரு வின்னனுக்கிரகம்புரிந்து
  கதிரவனெனு மதியளவால்
கற்பசாதனையில் காயமும்வலுத்து
  கடவுளின் சிற்றிப்பெத்தனமே. 146

சித்தருய்ஜெனனமெடுத்து மெஞ்ஞானஞ்
  செகத்தினிலுதிரமுன் கருவில்
தெளிந்தன்னை கற்பக்குழிதனிவிந்து
  செனிக்குஞ்செவ்வித மன்னுட்பருவம்
வித்துபாய்ந்துதித்து நாதஞ்சேர்ந்துணர்ந்த
  வேதசாஸ்திர யோகதிட்சையால்
விந்துநாதமுஞ்சேர்ந்த மிசையின்னவால்
  விவேகம்வந்திடுமென வறியார்
சுத்ததிதமதிரவியுணர்ந்த திருதுரக்குழியதில்
  பொருத்தஞ்சூட்சமா றரிவதரிதரிதமுரி
சுயசுத்த ஞானபேரின்பம்
  முத்தமிழுணர்ந்த யகத்தியமுனியால்
முறைதவருமனுமுலகில் மொழியவாருதியின்
  கடனுவர்நீங்கி முத்திபுஞ்சித்திபெத்தனரே. 147

பெற்றபேறதிர கற்பசாதனையை
  பேசுவதெளிதெல்ல பேசார்
பேரின்மக்கடலில் மூழ்கியக்கறையில்
  பெரும்பதியடந்தப் பண்போர்கள்
சித்தர்களுயர்ந்த மதிவளரபானம்
  சிரஞ்சீவிபதவில் தெளிய
தேகசித்ததிமஞ்சாண்டு வுற்பகமே
  செயம்பெறக் கற்பமுண்டறவை

நிற்றதிகாலை மதியில்முப்பதிதம்
நிகழ்ந்திடுங் கடுகளவெனினும்
நீங்கிடாமலுமே னெறியில்னின்றுயர்ந்து
நெஞ்சகமெனு மிடைகலகொண்டுற்று
வாசியதை பின்கலைக்கருதி
வுயர்ந்திலகிய சுழிமூலம்
வுகமைகண்டுதிப்பிறுண வாய்வதனை
உம்மென்றனேக்கி உச்சகமே. 148

வேறு.

உச்சிக்கீழ்பின் வுண்ணாக்கின்மேல்
பத்தீபம் பச்சைமாணிக்கம்பாரும்
பிரகாசமும் வச்சிரமாளிகைவைத்தப்
பொருளெனும் றட்சகனிருந்துச்சிதம்பாருமே. 149

மேலாதார மிருப்பிடம்வாசிதான்
தூலமாவதில் சூட்சமிருப்பிடம்
ஆலகால யமிர்தசஞ்சீவியும்
கோலமிவ்வாரு குறிப்பரிந்தாதுமே. 150

ஊதுந்தாரைவோ ரஞ்சதுவாண்டினில்
நாதவிந்து நடத்தையிவ்வாரினல்
வேதசாறம் வெண்சாரைப்பிரபல்லியம்
வாதவித்தை வசியமதாகுமே. 151

வசியவாவென வங்குசிங்கென்றபின்
விஜயராஜ யோகஞ்செய்விதிப்படி
திசையெனுங்கலைவாய்வு வொன்றுகிடில்
தசையெனும்வுருவந்தானும் வொன்றுகுமே. 152

வொன்றேயெழுபத் தீருயிரம்நாடியி
லென்றேயிருபத்தோ ருயிரத்தருனாரு
வுண்டேயுதித்திடு மொடுங்கலையெனும்
நன்றேயொருமித்து நாடுமவதே. 153

நாடிஓமென் றெருகடிகைப்பதம்
வோடிடும் நவத்துவாரம்
ஓடாமலும் மேடியவாசியிழுத்து
மேல்னேக்கிடயாடி யண்டரண்டகளுலாவுமே. 154

அண்டம்புக்கும் யழுத்திஞல்வாசியை
தெண்டிரைக்கடல் திசையெட்டுலகெலாஞ்
சென்றுமேவித் திருநடனம்புரிந்
தென்றுமின்று மிவர்க்கொருநாழியே. 155

ஆருண்டு.

நாதவிந்து நளினமாருண்டுபார்
சூதவித்தைசூட்ச தேகியுமாவர்காண்
பூதமைந்து புகழ்ந்திருந்தேவிடம்
சாதனஞ்செய் ததனையறியார்களே. 156

விந்துதித்த விதமறியாமலும்
மைந்தருன வகைதெளியாமலும்
கந்தைசுத்திய காமக்குழியினி
லிந்திரியம் விட்டெங்கடிந்தரே. 157

மடிந்திடாமலும் மாய்கையகத்திடர்
மடந்துமுப்பா ழுதுகடந்தேரிடா
நுடந்துயோனி யுல்லாசமறந்திடா
நடந்துவாசி னதிகண்டுலாவரே. 158

உவ்வும்அவ்வும் வுடலுயிரட்சரம்
மவ்வும்நவ்வும் மதிரவியாகிடில்
சிவ்வுவவ்வுஞ் செழுங்கனல்வாய்யுதான்
யவ்வும்வொவ்வு மகாரத்திலஞ்சதே. 159

அஞ்சுகூடி யமைத்தபிரபல்லியம்
பஞ்சபூதம் படைத்துப்பலனறி
நெஞ்சரிந்து நிலைத்துநின்வாசியை
யஞ்சிமூன்றி லடக்கவல்லார்களே. 160

அஞ்சுமூன்றும் அகாரவுகாரமாய்
பஞ்சதாதுப் படைத்துப்பரமதாம்
நெஞ்சில்நின்று நினைத்தபொருளறிந்
திஞ்சிடாமல் துரிதமாயூதிடே. 161

ஊதவூதவுன் னுக்குள்பிரகாசமே
நாதவிந்து நடத்தையரிந்திடில்
வாதசித்தி வருமாருயாண்டினில்
பேதம்வாருப் பெருவெளிமூலமே. 162

மூலாதார முனைச்சுழிநிர்மல
வாலைகுண்டலி வச்சிரக்குகையினிற்
ஞாலவாசி நகாரம்பிரிதீவியில்
தூலனடி துடர்ந்துமுளைப்பதே. 163

துடர்ந்துநாடியில் சோதிப்பிரகாசமே
நடந்துவாசி நயனங்கீழ்வாசியிற்
படர்ந்துபன்னி ரெண்டுமீரெட்டுமாய்
கடர்ந்துசோமன் கதிரவனாகுமே. 164

கதிர்முனைச்சுழி காரத்தைப்பற்றிடும்
மதிரவிமலம் வாருதியாகிடும்
விதியிருந்து விளங்கிடும்வாசியும்
துதியுஞ்ஞானச் சுகாதீதம்பாருமே. 165

ஏழாமாண்டு.

துதியுமாரு சுகங்கண்டுயேழினில்
நதியின்மூலம் நளினமொன்றாகியே
நிதியுமுப்பு னிருத்துக்கடுகுவை
கதியுங்கற்பங் காலைமாலையுண்டிடே. 166

உண்ணவுண்ண வுனக்குள்பிரகாசமே
யெண்ணுமுண்ண யெட்டெட்டுமறியலாம்
பண்ணுநூல்மறை பாழையீரெட்டதும்
மண்ணுவிண்ணும் மருவிநின்றாடுமே. 167

மருவவும்மதி மாய்கையகத்திடும்
வுருவரிந்துட லுன்னுடல்காண்கிலார்
திருவரிந்து செகச்சாலமாடலாம்
குருவரிந்து குளிகைசெய்வோர்களே. 168

குளிகையென்ன குருவென்னவாசிதான்
வளியறியார் வழலைப்பெருமைதான்
அழிவதில்லை யகாரவுகாரமாங்
கருவதுண்டோர் கருவரியார்களே. 169

கண்டபேர்சிலர் கண்டுங்காணார்சிலர்
வுண்டபேர்சிலர் வுண்டுமுண்ணார்சிலர்
வென்றபேர்சிலர் வேண்டும்வேண்டார்சிலர்
வண்டபிண்ட மறிந்தறியார்களே. 170

அறிதல்வாத வயித்தியஞ்சித்தியாம்
குறியும்யோகக் குளிகைசித்தாவதும்
நெறியும்ஞானம் நிலைத்திடுந்தத்துவம்
பிறியமாஞ்செகப் பெண்மயல்தள்ளிடே. 171

மாயசித்தி மர்ப்பசெனங்களும்
ஓயாவாசியி லூதிடுஞ்சாயலும்
தோயவெண்மதி சோதிவிருட்சமும்
சாயாவிருட்சமுந் தன்னுக்குளறிவதே. 172

தன்னைத்தானே சாதித்துவுண்டோர்கள்
யன்னைதன்னு ளறிந்தமுதூட்டுவாள்
உன்னுள்ளுகந்துனின் றூடிடும்வாறினில்
முன்னமேமொழிந் தூதிடும்வாசியே. 173

வாசினின்று வளர்பிறையானதால்
மாசிலாமதி மாலின்மயத்தினல்
காசியோர்கடி கைக்குள்ளேபோகலாம்
நாசியினுணி னூடித்துதித்திடே. 174

எட்டாமாண்டு.

நாடுங்கற்பம் நயந்திருனுலினில்
லாடுங்காயமைங் காயமுஞ்சித்தியாம்
சாடுமாறணத் தயிலமிறக்கலாந்
தேடுமூலப் புளியின்செயலதே. 175

செய்கைமூலப் புளிச்சுன்னங்காரனீர்
வைகையதாமதி வாருதிநீர்சலம்
வெய்கையாஞ்செய நீரைவிட்டப்பதம்
பையச்சாடிப் பகர்வதரிந்திடே. 176

அருசுவைசெய நீரதுகொண்டபின்
மருபடாமல் மதியைவிட்டாட்டியே
குருகவும்புன்னைக் காயளவாகிடில்
யிருதயத்தினில் மேலும்விளங்கிடே. 177

மேலதாகிவிளங்கிடும் காலைதான்
வாலையாய்வடி வாகும்வயதெனும்
மாலையில்வித மாரிவருகையில்
தூலசூட்ச சுகாதீதங்காணுமே. 178

காணும்யோகக் கருத்தரிந்தூதிட
தோணுஞ்ஞானச் சுயம்புலிங்கேசரே
தூணுமேதிரும்பாகிடுந் தூணதாம்
வேணுமுப்பு விரிம்பிடுங்கற்பமே. 179

கற்பசாதனே கைவசமாகிடில்
அற்பதேகமது வஜ்ஜிர தூணதாம்
தற்பதாபர சங்கையறிவதும்
சொர்ப்பமல்ல சுடரொளிசூட்சமே. 180

சுடரனந்தசிவ சூட்சசடாதாரம்
வுடனறந்துயோக சாதனையிப்படி
நடனபொற் கமலாலயஞ்
சூழ்மதிகடவுளின்பத காட்ச்சியைப்பாருமே. 181

பார்க்கப்பார்க்கப் பறபிறமம்சொரூபமாய்
கார்க்கசற்குரு கற்பமெட்டாண்டினில்
பூர்க்குமாத்து புகழிருநாலதாம்
யார்க்குந்தோணுத் ததிசயமாகுமே. 182

ஒன்பதாமாண்டு.

அதிதவாசியறிந் தொன்பதாண்டினில்
விதிமறைப்படி மேல்கண்டதாரையில்
மதிமலர்த்திருமாலின் தெரிசனம்
கெதிபெருஞ் சிவகெவனங்கொண்டேருவாம். 183

கெவனவாசி வாவாவெனக்கேசரி
மவுனங்கொண்டு மதியமுர்தமுணர்
புவனம்பாயப்புகழ் கண்டதாரையில்
கவனமாய்க் கருத்தங்கனேகாருமே. 184

காருமேகலையாமலும் வாசிதான்
பாருமேரத்னம் பார்க்கப்பழக்கமாய்

நீருமேனிலைத் தொன்பதுஞ்சென்றதால்
சீருஞான சிவசத்தியின்கூறதே 185

சத்துசித்தஞ் செகசற்வலோகாதீதம்
சித்திபெற்று தசைதீட்சையாவருய்
வெத்தியோக மெஞ்ஞானவசியமாம்
சுத்தவானுய் சுகம்பெருவார்களே. 186

பத்தாமண்டு.

சூகாதீதமெனுஞ் சூட்சக்கருவரிந்
தாகாசபரியந்த மஷ்டசித்தாடுவான்
நுகாங்காலமொரு கோடினுள்வறை
யேகாந்தமாயிருந்த தீட்சைபோற்றுவாம். 187

தீட்சைபத்துமுயர் திரேகம்வலுத்தது
மோட்சசுகாதீத முப்பாழுங்கண்டது
சாட்சியின்னுல் சகலமொழிந்தது
காட்சிபெத்து கனம்பெருவார்களே. 188

மூலிகைக்ளாக.

பெற்றபேற் பிரவியொழிந்தது
பத்துமாத்துப் பசும்பொன்விளைந்தது
உத்துப்பார்க்க வுருவெளியாச்சுது
சித்தருன செயலறிந்தோதுவாம். 189

ஓதுஞ்சித்தரூலாவும் பொதிகையில்
சோதிவிருட்சஞ் சுணங்கவிருக்ஷமும்
பூதவிருக்ஷம் பொற்கள்ளிபொற்றுமறை
வாதமூலி வளர்கருநொச்சியே. 190

கருதுஞ்செந்துரு கற்றுழையில்செழும்
பெருதுவெண்சுத்தி பின்னுங்கையான்கரு
அருதுகிலக்கொடிவேலி பொற்சித்தியும்
துரிதவெண் கண்டங்கத்திரிதோணுமே. 191

தோணுஞ்செங்கள்ளி செல்கொடிவேலியும்
காணுங்கருத்து கதிர்மூலிலையுடன்
பூணும்ரோம புகழும்விருட்சமும்
மீணுங்கதலி யிதுகருப்பாகுமே. 192

கறியயாம்பல் கருப்புயாதண்டையும்
பிரியசெங்கோவை பிலத்ததிகைப்பூடும்
வறியதோர்நிலப்புற னடிகருநெல்லி
யறியதோர்யமு கண்ணிவிருட்சமே. 193

வேறு.

தோத்துங்தோத்தாத் தொழுகண்ணிவிருட்சமும்
சாத்துஞ்சாய விருட்சத்தின்னேர்மையும்
பார்த்தப்பேர்கள் பறியேமகற்பமாம்
கார்த்தெடுங்காய சித்திக்குகந்ததே. 194

காயசித்திக்குகந் திருவத்தேழும்
கற்பமுண்டுதச வாண்டுடுசென்றபின்
தூயமூலியொவ் வொன்றுெருபட்சமும்
சுத்தமாகச் சமூலமுஞ்சூரணங்
நேயமாயிரு காலேயுமாலேயும்
நின்றமேபனங்கற்கண்டு பத்துக்கொன்
ருய்சேர்த்து அதனேவுட்கொள்ளவும்
யானபின்னதின் யாட்டமேபாருமே. 195

வேறு.

பாருஞ்சோதி விருக்ஷத்தின்பாலதை
நீருமேபலம் நேரிடையஞ்சதாம்
வாருமீங்காணதி லிட்டுணர்வதாய்
நீருமம்பிகை சீர்பாதம்போற்றுவாம். 196

போற்றுவாய்தொழு தம்பிகைபாதமே
யேற்றுவாசி யிடைபின்கலையதில்

மாத்திபூதி வங்கென் றிருத்தியே
பாத்திடும்பறை பாதம்பணிந்திடே. 197

பாதம்பணிந்து பால்பாகமாய்கொண்டிடு
வாதமெண்பத்தினுல் வாருதிபுக்கிடும்
ஓதும்பித்தம் வொளித்துநாற்பத்திரெண்
டேதுசேத்தும மிருபத்தொன்றேகும். 198

எழுபத்தீரூயிர ளுடினறம்பதும்
யழிந்தியே யமதுபோலிரிகிடும்
விழுந்திடுஞ்செடம் மென்மேலுமழுந்திடும்
யெழுந்துபோம்வினை யிருவினையில்லையே. 199

இல்லையே நமனிம்பா லுணர்ந்திடில்
தொல்லையில்லாச் சோவிருக்ஷத்தின்கீழ்
கல்லுமேகறி டில்லாச்சுபஸ்தமாய்
வல்லாம்வஸ்திர மடித்ததின்மேலேறே. 200

இருந்துமேல் படுத்தினியுன்மனிதனுய்
பருத்திப்பாச்சிப் பயர்பச்சரிசியும்
அருந்தவமரியா தோருனிண்ணயம்
பொருந்தீயாகாப் பீழைவருக்காச்சுமே. 201

வாதப்பித்த சிலேத்துமசுரமது
தாதுபத்திசடத்தில் சுவாலையாம்
காதடைத்து காந்திசெழுமையாம்
சேதம்வாருச் செவியுமடைக்குமே. 202

மேலுமுச்சி யிருபுருவம்நடுமாலும்
நெஞ்சுவதின்கீழ் மார்மய்யமும்
ஒலதின்கீழ் னடுமையம்னுபியில்
சூலைகட்டிசுர தோஷந்தோன்றுமே. 203

தோன்றிடுஞ்சட மாதிதஞ்சூழ்ந்திடில்
நின்றிடும்நெடு சங்குப்பழமதாய்

மூன்றிடுமூன்றே முக்காலதுகடி
தாண்டிடாமல் சலசஞ்சுயூட்டே. 204

தாண்டிடாதிரு தாளைப்பிடித்திடும்
வேண்டிதந்தமும் மேல்கீழ்வொண்ணுகிடும்
தாண்டிக்கிட்டித் திடர்ந்தாள்
வாங்கிபின்றூண்டியோர் படியூட்டியுபாயமே. 205

ஊட்டிப்பார்க்க வுடைந்தேகட்டிகட்
காட்டிலேகுங் கனதுர்க்கவாசமாய்
மேட்டியாயுடல் மேலாஞ்சவுக்கியம்
நாட்டியேனுகத் தாளியறைத்திடே. 206

தாளியான தழையையரைத்துடன்
கோளில்லாமல் குழைத்துச்செடமெல்லாம்
பாழில்லாமல் பதமாய்நதிதனில்
நாளில்லாமல் நயந்துகுழித்திடே 207

நயந்துயிவ்விதம் நாடினுல்திரேகமும்
மயமுங்காயமா யாசித்தியாவருய்
பயமும்நீங்கும் பதினுலோகமும்
நியமதாகி நிலவொளியாகுமே. 208

நிலவுபோல்விழி நீண்டொளிவாகிடும்
துலவுயஞ்ரனஞ் சோதிப்பிரகாசமாய்
வலுவதாகிடும் வாதவசியமும்
கொலுவதாய்பரை கொஞ்சுவாள்நெஞ்சமே. 209

பத்துமாத்துப் பரியேமத்தேகமாம்
சுத்தஞானச் சுடரொளித்தீபங்காண்
அத்தன்பாத மனுதினம்போற்றியே
யித்தலத்தி லென்றுளுமிருப்பரே. 210

எண்சாண்தேக மெழுகுவச்சிரமதாம்
வுண்மூல மூலாக்கினேமீறிடும்

மண்ணும்விண்ணும் வளர்பிறையாதலால்
யண்ணலாதி யன்பதம்போற்றுவாம். 211

வாசஞ்செய்தல் மதிரவிகற்பினே
ணேசம்பூரணம் நேர்மைநெறிகளால்
பூசிதப்பறி பொன்சொரூபங்களே
வாசினுமய மாற்றமரிவரே. 212

மாறிமாறி வசியஞ்செய்வாசியா
லேறியேறி யிடைகலைபிங்கலை
மீறிமீறிமென் மேலுஞ்சுழிதனில்
வீறிவீறி விளங்குவதென்பதே. 213

தென்பொதிகையின் தெட்சணாமூர்த்தியால்
யன்பனையடியனடிய னவின்றமொழிதனை
பொன்போலும் புலத்தீசர்வழங்கிய
யின்பஞானம் யிருனாரதீதமே. 214

அதீதசோதி விருட்சமப்பாலினில்
விதியதாகயினி மேலுமுறைப்படி
பதியதாய்ப்பரம் பத்துபத்தாயிசை
மதியிறங்கல் மார்க்கமதாகுமே. 215

மார்க்கமாய்மதிப் பாலுமேல்கீழதாய்
தீர்க்கமாயதிகட் டாமலேமுட்டியே
சேர்க்கையாகத் தெளிந்துகீழுடன்பூர்க்க
செந்தணல் பொட்டெடுத்தாத்துமே. 216

ஆத்திடும்பாதம் யய்யஞ்சுமாச்சதாம்
சூத்திரமாகுஞ் சுணங்கன்விருட்சப்பால்
போற்றிடும்முன் புகழ்ந்தசெய்கைதான்
மாத்ததீத மயமென்னபாருமே. 217

மயமதீதம் வசனித்தமூலிகள்
சுயமதாகிடுஞ் சூட்சனூலாயிரம்

நியமதென்பொள் நேரறிந்தோதினேம்
செயலதீதம் சித்தாடலாம்பார்த்திடே. 218

ஆட்டுமூலி யஷ்டமாசித்ததும்
தேடிடுமின்னூல் செகத்திலரிதெனும்
நாடினூல்வேதை நாங்களருளிய
கோடிக்கொன்று குவலயத்தோர்களே 219

கோடாகோடி குரிமுனிவாக்கியம்
தேடித்தேடித் தியங்கினார்மாணுக்காள்
நாடிநாடி நயந்துருவாகிய
மேட்டாமேட்டி மிகுந்தயின்னூலிதே 220

இன்னூல்கற்ப மிருனூற்றிருபதும்
முன்னாமமுடிந் தாயிரம்யன்னூர்
தனமேயருளம்பிகை பொற்பதம்
சொன்னஞானச் சுருக்கமுடிந்ததே 221

சுருக்குஞான சுகாதீதசூத்திரம்
பெருக்கவாழி பிருணுலயஞ்சூழ்நகர்
குருக்காசான் குருமுனிதன்பதம்
யுருக்கமாயுட லுற்பகம்வாழ்த்துவாம். 222

**புலஸ்தியர் விளக்கிய ஞானகற்பம் 222.**

முற்றுப்பெற்றது.

---


வைத்திய புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஊர்வசி வைத்ய சிட்கா 2பாகமும் | 1 | 0 | 0 |
| பாலவாகடம் வைத்தியம் 1,200 | 1 | 0 | 0 |
| புலஸ்திய மகாரிஷி வாதசூத்திரம் 300 | 0 | 12 | 0 |
| வைத்தியக்குறள் பழமொழிவிளக்கம்-108 | 0 | 8 | 0 |
| தேரையர் வைத்தியம் 100 | 0 | 2 | 0 |

**இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,**
சக்கரவர்த்தி பிரஸ். நெ, 189 தங்கசாலை வீதி, சென்னை.

# ஸ்ரீமத் கம்பராமாயண

## பாலகாண்டம்

### மூலமும் - உரையும்

**பைந்தமி ழுணர்ந்த பக்திமான்களே !**

நெடிய கடல்சூழ்ந்த வுலகின்கண் மக்களாய்ப் பிறந்த நாம்
நம் வாழ்க்கை நலம்பெறக் கேட்கும் புண்ணிய சரித்திரங்களில்
ஸ்ரீமத் கம்பராமாயணமும் ஒன்றாகும். இக் கம்பராமாயணம் படிக்
கப் படிக்க இனிமையையும், கேட்கக் கேட்க சந்தோஷத்தையுந் தர
வல்லது. தவிரவும், ஸ்ரீவைகுந்த வாசனும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி
யினது பிரதாபங்களைக் கூறுமிப்புண்ணிய சரித்திரத்தைப் படிப்
போர் இகத்திலின்பத்தையும், பரத்தில் முத்தியையும் பெறுவார்க
ளென்பது மிகையாகாது.

அயோத்திமா நகரத்தி லறுபதாயிர மாண்டு அரசாண்டு வந்த
தசரதசக்கரவர்த்தி தனக்குப் புத்திரபாக்கிய மில்லாது வருந்துங்
காலத்துக், கலைக்கோட்டு மகாமுனிவறியற்றிய வேள்வியி லுண்டான
அவிர்ப் பாகத்தைப் பெற்று, தன் தேவியர்களான கௌசலை, கை
கேயி, சுமத்திரையாகிய மூன்று மனைவியர்களுக்குங் கொடுக்க;
அதையேற் றுட்கொண்ட பத்தினிகள் வயிற்றிற் பிறந்த ஸ்ரீராம
பிரான், பரதன், இலக்குமணன், சத்துருக்கனாகிய நால்வரும் வளம்
பெற வாழ்ந்து வருங்காலத்து, விசுவாமித்திரர் தன் யாகத்தைப்
பூர்த்தி செய்ய வல்லவர் ஸ்ரீ ராமபிரானே யாமென்றழைத்துச்
செல்ல, அங்ஙனம் தாடகையை சம்மாரஞ் செய்து யாகத்தைப்
பூர்த்தி செய்தும், அகலிகையினது சாபம் நீங்கச் செய்தும், மிதிலை
யடைந்து ஜனகமகா ராஜனிடத்துள்ள சிவதனுசை வளைத்தும் சீதா
பிராட்டியை மணமுடித்துத் திரும்புங்கால் வழியில் எதிர்த்த பரசு
ராமனது கர்வபங்கத்தை யடக்கியும் அயோத்திமா நகரை வந்த
டைந்த ஸ்ரீராம பிரானது திருவிளையாடலாகிய பால காண்டத்தை
மாக வித்வான் ஸ்ரீமான் காஞ்சிபுரம், இராமசாமி நாயுடவர்களால்
செய்யப்பெற்ற உரையைக் கொண்டு பலருக்கும் பயன் பெறு
மாறுப் பிழையின்றி சுத்தப்பதிப்பாக அச்சிட்டு, புல் காலிகோ
பயிண்டு செய்திருக்கின்றது. விலை ரூபா 3 8 0

இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

நெ. 189, தங்கசாலை தெரு, மதறாஸ்.